விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 226 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 17 சனிக்கிழமை (02.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஐ.நாவில் இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி உருவாக்கப்பட்ட கடிதம்

### தமிழரசுக் கட்சி கையொப்பமிடும் – கஜேந்திரகுமார்



(யாழ்ப்பாணம்)

ஐ.நா அமர்வில் இலங்கையின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை வலியுறுத்தி உருவாக்கப்பட்டுள்ள கடிதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி கையொப்பமிடு மென எதிர்பார்ப்பதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டதன் வடிவமே செம்மணிப் புதைகுழி

### அகழ்வுப் பணியைப் பார்வையிட்டதன் பின் சிறீதரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டதன் வடிவமே செம் மணி மனிதப் புதைகுழி என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வு நட வடிக்கைகளைப் பார்வையிடுவதற்காக நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக்

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் மீட்கப்பட்ட சான்றுப் பொருட்கள்

# எதிர்வரும் செவ்வாய்க்கிழமை

# பொதுமக்கள் பார்வைக்கு

### அடையாளம் காண நீதிமன்றம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட் கப்பட்ட சான்றுப் பொருட்களைக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அடையாளம் காண உதவும் வகையில் அவற்றைக் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)







### ஊடகவியலாளர்

## நிலக்ஸனின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல்




15ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகத்தில் வாள்வெட்டு

### ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் பிரி

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

செம்மணியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒரு வர் உயிரிழந்துள்ளார்.

இதில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணசாமி லிங்கேஸ்வரன் (வயது-62) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த திங் கட்கிழமை (28) காலை மோட் டார் சைக்கிளில் யாழ்போதனா வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது செம்மணி மயானத்துக்கு முன்பாக துவிச் சக்கரவண்டி ஒன்றை முந்திச் செல்ல

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணிப் புதைகுழியைப் பார்வையிடவுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழு எதிர்வரும் 04ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் செம்மணி சித் துப்பாத்தி மனிதப் புதைகுழிப் பிரதேசத்தை பார்வையிடுவ தற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியப்பணிப்பாளர் ரி.கனக ராஜ் தெரிவித்துள்ளார்.


இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர்கள் மற்றும் இரண்டு பணிப்பாளர்களுடன் யாழ்ப்பாணப் பிராந்திய அலு வலர்கள் அடங்கிய குழுவினர் இந்த பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

மேலும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ள தரப்பின ருடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் காணாமல் போனோர் அலுவலக அதி காரிகளுடனும் மனித உரி மைகளுக்கும் அபிவிருத்தி

04ஆம் பக்கம் பார்க்க

## 4 மனித எலும்புத் தொகுதிகள் நேற்றும் அடையாளம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் நேற் றுப் புதிதாக 4 மனித எலும்புக்கூட்டுத் தொகு திகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் 2ஆம் கட்டத்தின் 27ஆவது நாள் அகழ்வுப் பணி நேற்று யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா மேற் பார்வையில் முன்

02ஆம் பக்கம் பார்க்க

## கோண்டாவிலில் இராணுவத்தின் பவுஸர் விபத்து

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த இராணுவத்தினரின் தண்ணீர் பவுஸர் ஒன்று தனி யார் வாகனம் ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகி யுள்ளது.

02ஆம் பக்கம் பார்க்க

### போர் முடிந்து 17 வருடங்கள் கடந்தும்

## வடக்கு மக்களின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படவில்லை

### அமைச்சர் சந்திரசேகர்

(கிளிநொச்சி)

போர் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்தும் வடக்கு மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படவில்லை.

எனவே வடக்கில் இருந்து வறுமை ஒழிக்கப்பட வேண் டும் அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்

04ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

நல்லூர்
சிறப்புச் சொற்பொழிவு

### தமிழகம்
### சுவாமி சிவாக்கர தேசிகர்

அவர்கள் 03.08.2025 முதல்
05.08.2025 வரை மாலை 7.00
மணிக்கு ஆதீன கலா மண்டபத்தில்
சிறப்புரையாற்றவுள்ளார்

நல்லை ஆதீன நம்பிக்கை
பொறுப்பாளர் சபை

(4944)



## உடனடி வேலைவாய்ப்பு

வடமராட்சியில் நன்மதிப்பைப் பெற்ற பிரபல்யமான, பல கிளைகளைக் கொண்ட வெதுப்பக உற்பத்தி நிறுவனத்திற்கு பல்வேறுபட்ட வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

01.உற்பத்தியாளர்
02.விற்பனையாளர்
03.பொதி செய்வோர்
04.களஞ்சிய காப்பாளர்
05.கிளை முகாமையாளர்

போன்ற பல்வேறுபட்ட வேலைவாய்ப்புக்கள் காணப்படுகின்றன. மேற்கூறப்பட்ட வேலைகளுக்கு அனுபவம் உள்ளவர்களும் மற்றும் வேலை பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு:
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(4941)

தொடர்பு: 077 269 0764



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


## 4 மனித ...

னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 4 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட 7 எலும்புத்தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணியில் இதுவரை 122 மனித எலும்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு 112 மனித எலும்புத்தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

(ம-7,33,104)

## இராணுவ...

கோண்டாவில் - உப்புமடம் சந்திப் பகுதியில் நேற்று மதியம் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது தனியார் வாகனமானது பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் உயிர் ஆபத்துக்கள் எவையும் ஏற்படவில்லை.

விபத்துச் சம்பவம் குறித்து விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,104)

## 5ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 21.12.2004 | உதிர்வு 28.07.2020

### மணிவண்ணன் லக்ஷிகா

*திதி: நவமி*

இன்பம் இணைத்த இனியவளே
துன்பம் துடைத்த தூயவளே
பாசம் பழக்கிய பனிமலரே.... இனி
எங்களுக்கு உனைப் போல் யாருளரோ

இப்ப தான் நடந்தாய்
தெரியும் பொழுதுகளெல்லாம்
எப்பவும் தொட முடியாத சித்திரங்களாய்
ஆற்றாத் துயர் அணை மேவினும்
நெருங்க முடியாத தூரங்களானாய்

ஓய்ந்து விட்ட ஓவியமே
கரைந்து விட்ட காவியமே
வளர முடியாத வளர்பிறையே... நீ
வர முடியாதா மறுமுறையே ?....

என்றும் உன் நினைவுகளோடு வாழும் குடும்பத்தினர்.

துர்க்கா ஸ்ரோர்ஸ்,
ஏழாலை தெற்கு, சுன்னாகம். (1398)

குடும்பத்தினர்
077 614 1764


## நயினை அம்மன் திருமண சேவை

சகல சமூகத்திற்குமான உள்நாட்டு, வெளிநாட்டு திருமண சேவை. 1980ம் ஆண்டு பிறந்த france நிரந்தரக் குடியுரிமை உடைய யாழ்..இந்து கௌரவ குல மணமகனுக்கு மணமகள் தேவை.

(1399)

பதிவுக்கட்டணம் இலவசம்
டச்சு வீதி, கல்வியங்காடு
whatsapp
076 050 3863, 076 311 9485



## பைவர் மணவறைகள் விற்பனைக்கு

பைவர் மணவறைகள், அது சார்ந்த பொருட்கள், பிள்ளையார், தாமரைத் தொட்டி, தீபனாதி பொம்மை போன்ற அலங்காரப்பொருட்கள் விற்பனைக்குண்டு
(விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்)

(4946)

077 978 9467


# மரண அறிவித்தல்



மலர்வு 26.11.1945 | உதிர்வு 01.08.2025

## திருமதி நாகரத்தினம் புஷ்பராணி

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட நாகரத்தினம் புஷ்பராணி அவர்கள் நேற்று (01.08.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

காலஞ்சென்ற மார்க்கண்டன் - ராணி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற நாகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற காலகண்டன், விடகண்டன் மற்றும் திருநீலகண்டன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோபாலகிருஷ்ணன் அவர்களின் அன்புத் தாயாரும் சிவகுமாரி அவர்களின் அன்பு மாமியாரும் ஜெகஜீவன், ஷம்சாயினி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 09.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

383/26,
நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(4945)

தகவல் :
மா.திருநீலகண்டன்
077 778 4880
021 222 3276

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான வரியை குறைத்தது அமெரிக்கா

(வோஷிங்டன்)

**இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை 20 சதவீதமாக குறைத்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.**

அமெரிக்க ஜனாபதி டொனால்ட் ட்ரம்ப் பல உலக நாடுகளை இலக்குவைத்து புதிய வர்த்தக வரிகளை கடந்த மாதங்களாக அறிவித்து வந்துள்ள நிலையில், அந்த வரிகள் நேற்று முதல் அமுலுக்கு வரும் நிலையில், சில நாடுகளுக்கு புதிய வர்த்தக வரி விதிப்புக்களை அறிவித்துள்ளார்.

அதன்படி, இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 20 வீத வரி விதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 44 வீத வர்த்தக வரி விதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், தற்போது அந்த வரி 20 வீதமாக சரிசெய்யப்பட்டுள்ளது. இந்த வரி விதிப்பால் இலங்கையின் ஆடைத் தொழில்துறை பாதிக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதேவேளை, கனடாவின் மீதான வரிகள் 25 வீதத்திலிருந்து 35 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளன. கனடா, அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்கள் மீது டிஜிற்றல் சேவை வரி விதித்ததால், இதற்குப் பதிலடியாக இந்த வரி உயர்வு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் இன்னும் இறுதி செய்யப்படாததால், இந்திய இறக்குமதிகளுக்கு 25 வீத வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் அறிவித்துள்ளார்.



புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் இல்லாத ஏனைய நாடுகளுக்கு 10 வீதம் என்ற அடிப்படை வரியைச் சந்திக்கும்.

இந்த புதிய வரி விதிப்புகள் குறித்து இலங்கை அரசாங்கம் ஆய்வு செய்ய ஒரு குழுவை நியமித்துள்ள போதிலும், நேற்று முதல் ஏற்கனவே அமெரிக்காவால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய வர்த்தக வரி விதிப்புக்கள் அமுல்படுத்தப்படுகின்ற நிலையில், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய வர்த்தக வரிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தொண்டையில் சிக்கிய பணிஸ்

### முதியவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பணிஸ் துண்டு தொண்டையில் சிக்கி நபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் கொழும்பில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹோமாகம, பிட்டிபன பகுதியை சேர்ந்த ஓய்வுபெற்ற நகர சபை சாரதியான 72 வயதான சுனில் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த முதியவர் பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பணிஸ் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது துரதிர்ஷ்டவசமாக அது அவரது தொண்டையில் சிக்கிக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், குடும்பத்தினர் அம்புலன்ஸை அழைத்து அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற போது, நோயாளியை பரிசோதித்த செவிலியர் அவர் இறந்துவிட்டதாக அறிவித்தார்.

அவர் சாப்பிட்ட மீன் பணிஸின் ஒரு துண்டு நுரையீரலுக்குள் சென்று சிக்கியதால் ஏற்பட்ட சுவாசக் கோளாறே மரணத்திற்கு காரணம் என பிரேத பரிசோதனையில் தெரியவந்தது. (நி)

## கடந்த 6 மாதங்களில்

## 300 பொலிஸ் அதிகாரிகள் இடைநீக்கம்

(கொழும்பு)

கடந்த 6 மாதங்களில் 300 பொலிஸ் அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆறு மாதங் களில் மட்டும் 300 பொலிஸ் அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

ஒரு அரசாங்கமாக, அவர்களின் பதவியைப் பொருட்படுத்தாமல் சட்டம் அமுல்படுத்தப்படும் .

பொது சேவையில் உள்ள ஒரு சிறிய எண்ணிக்கையிலான மக்கள் செய்யும் தவறுகளால் முழுப் பொது சேவையும் களங்கப்படுத்தப்படுகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

## போதைப் பாவனையை ஒழிக்க எம்முடன் கைகோருங்கள்

### அமைச்சர் வசந்த சமரசிங்க அழைப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை தீவிரமடைந்துள்ளமை பாரதூரமானது. போதைப்பொருள் வர்த்தகத்துக்கும், அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

ஆகவே போதைப்பொருள் ஒழிப்புக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென உணவு பாதுகாப்பு மற்றும் வணிக, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற அரச அதிகாரிகளுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

போதைப்பொருள் ஒழிப்புக்கான நடவடிக்கைகள் சகல அமைச்சு மற்றும் திணைக்கள மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை தீவிரமடைந்துள்ளமை பாரதூரமானதுடன், துரதிஷ்டவசமானது.

போதைப்பொருள் ஒழிப்புக்கு கல்வி அமைச்சு மட்டத்



தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சட்ட விரோதமான செயற்பாடுகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

## “சிற்றி ஒப் யாழ்ப்பாணம்”

## ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் வழங்கியுள்ள அங்கீகாரம்

(கொழும்பு)

ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தனது ஏர்பஸ் A320-200 ரக விமானமொன்றுக்கு சிற்றி ஒப் யாழ்ப்பாணம் (City of Yalpanam) எனப் பெயரிட்டுள்ளது. இந் நடவடிக்கையானது யாழ். மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தெற்காசியாவின் சிறந்த விமான சேவை என அண்மையில் விருது பெற்ற குறித்த விமான நிறுவனம், யாழ்ப்பாணத்தின் பாரம்பரியத்தையும், கலாசார முக்கியத்துவத்தையும் மதிக்கும் வகையிலேயே இவ்வாறு நடவடிக்கை எடுத்துள்ளது.

பல மேற்குலகநாடுகளில் தற்போது விடுமுறைக் காலம் ஆரம்பமாகியுள்ளதால் ஏராளமான புலம்பெயர் தமிழர்கள் தாயகம் நோக்கி வருகின்றனர். குறிப்பாக நல்லூர் மஹோற்வசம் ஆரம்பமாகியுள்ளதால் ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானங்களில் வருகைதந்த வண்ணம் உள்ளனர்.

இந் நிலையில் யாழ்ப்பாணத்தை பிரதிபலிக்கும் வகையில் பெயரிடப்பட்டுள்ளதால் அது புலம்பெயர் தமிழர்களையும் அதிகம் கவர்ந்துள்ளது. (நி)

## ஆண்களிடையே அதிகரிக்கும் நுரையீரல் புற்றுநோய்

(கொழும்பு)

பெண்களுடன் ஒப்பிடும்போது ஆண்களுக்கே நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவது அதிகரித்து வருவதாக விசேட அறுவை சிகிச்சை நிபுணர் வைத்தியர் சமன் இத்தகொட தெரிவித்தார்.

உலக நுரையீரல் புற்று நோய் தினத்தை (ஒட்டி) முன்னிட்டு சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில காலமாக ஆண்களுக்கே புற்று நோய் அதிகரித்து வருகின்றது. பெண்களை விடவும் புற்று நோயால் ஆண்களே அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் நுரையீரல் புற்றுநோய் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. எனவே புற்றுநோய் தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் புற்றுநோய் அறிகுறி காணப்படின் உடனடியாக வைத்தியரை அணுக வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கா பிரிமியர் லீக் போட்டிகள் நவம்பரில் ஆரம்பம்

லங்கா பிரீமியர் லீக்கின் 6ஆவது சீஸன் 2025 நவம்பர் 27 முதல் டிசம்பர் 23 வரை நடைபெறும் என்று ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இந்தப் போட்டிகள் இலங்கையின் மூன்று முன்னணி சர்வதேச மைதானங்களில் நடைபெறும்.

அதற்கு அமைவாக கொழும்பு, ஆர்.பிரேமதாச மைதானம், கண்டி பல்லேகல மைதானம் மற்றும் தம்புள்ளை ரங்கிரி மைதானம் ஆகியவற்றில் போட்டிகள் நடைபெறும்.

இலங்கையின் முதன்மையான உள்நாட்டு ரி-20 லங்கா பிரிமீயர் லீக் போட்டியானது, சர்வதேச ஈர்ப்பைக் கொண்டுள்ளது.

இது நாட்டின் சிறந்த முதல் தர கிரிக்கெட் வீரர்கள் சர்வதேச நட்சத்திரங்களுடன் இணைந்து போட்டியிடவும், அவர்களுக்கு எதிராகவும் போட்டியிட ஒரு துடிப்பான தளமாக செயற்படுகிறது. (நி)

# நவீன வசதிகளுடன் யாழில் உள்ளக விளையாட்டரங்கம்



யாழ்ப்பாணம் பிரதேசத்தை மையமாகக் கொண்டு நவீன வசதிகளைக் கொண்ட உள்ளக விளையாட்டரங்கம் ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்தார்.

இதுவரை உள்ளக விளையாட்டரங்குகள் நிர்மானிக்கப்படாத பகுதிகளில் தரமான உள்ளக விளையாட்டரங்குகளை அமைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணம் பிரதே சத்தில் உள்ளக அரங்கு இல்லை என்பதை யாரும் நம்பப் போவதில்லை. ஆனால் அதுதான்உண்மை. எனவே, இந்த வருடம் யாழ்ப்பாணம் உட்பட பல பகுதிகளில் உள்ளக விளையாட்டு அரங்குகளை நிர்மானிப்பது குறித்து நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். யாழ்ப்பாணத்தில் உள்ளக விளையாட்டரங்கை இந்த வருடம் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது" என அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த வருடம் 100 விளையாட்டரங்குகளின் மேம்பாட்டுப் பணிகளை ஆரம்பிக்க விளையாட்டுத் துறை அமைச்சு திட்டமிட்டுள்ளது. இந்த வருடம் சமர்ப்பிக்கப்படவுள்ள பட்ஜெட்டில் இருந்து நிதி ஒதுக்கி 2 உயர்தர செயற்கை ஓடு பாதைகளை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. கண்டியில் ஒரு செயற்கை ஓடுபாதை மைதானத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மற்றொன்று கிளிநொச்சி அல்லது அநுராதபுரத்தில் நிர்மாணிக்கப்படும்.

பாடசாலைகளில் விளையாட்டுத் துறை உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அதன் கீழ் விளையாட்டுத்துறை உபகரணங்கள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தரமான மைதானங்களை நிர்மாணிப்பது அத்தியாவசியமாகும்.

அதன் மூலம் இளம் சமுதாயத்தினரின் ஆற்றல்களை அதிகரிக்கச் செய்து சர்வதேச அரங்கில் பிரகாசிக்க செய்ய முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

## கண்ணீர் அஞ்சலி



எனது தந்தையின் சகோதரியின்
அன்புக்குரிய சிரேஷ்ட புத்திரன்


அமரர் **தங்கராசா செல்வபாலன்**

அவர்களது பிரிவை நினைந்து
வருந்துவதோடு அன்னாரது பிரிவின்
வலியால் துயருறும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரது ஆத்மா
சாந்தியடைந்து இறைவனுடன்
இரண்டறக் கலக்க பிரார்த்திக்கின்றேன்.

(C-3553)

Dr.ஜெ.ஜெயலன் :
சித்த ஆயுள்வேத வைத்தியர் – சுஜீவா வைத்தியசாலை
மருத்துவப் பதிவாளர், பிறப்பு இறப்புப் பதிவகம் – யாழ். போதனா வைத்தியசாலை
மற்றும் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



## தங்கராசா செல்வபாலன்
## (சாரதி – பருத்தித்துறை நகர சபை)

*பருத்தித்துறை தம்பசிட்டியைச் சேர்ந்த தங்கராசா செல்வபாலன் (சாரதி - பருத்தித்துறை நகரசபை) அவர்கள் நேற்று முன்தினம் (31.07.2025) வியாழக்கிழமை காலமானார்.*

*அன்னார் தங்கராசா - மனோகரி தம்பதியரின் அன்பு மகனும் அமரர்களான கணபதிப்பிள்ளை - செல்வபாக்கியம் தம்பதியரின் மருமகனும் தவமலர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பருத்தித்துறை பிரதேச சபை) அவர்களின் அன்புக் கணவரும் தவச்செல்வன், மயூரன்(ஜேர்மனி), தமிழ்ச்செல்வி (லண்டன்), தமிழினி(இலங்கை மின்சார சபை சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

*தகவல் : குடும்பத்தினர்*
[illegible]

தம்பசிட்டி,
பருத்தித்துறை.

(C-3551)

## வடக்கு ...

றது என்று கடற்தொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கிளிநொச்சி பளைப் பிரதேசத்திலுள்ள பிராந்திய தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் அங்கு உத்தியோகத்தர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்படி தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு தென்னை பயிர் செய்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக வடக்கில் இவ்வருடத்தில் 16 ஆயிரம் ஏக்கர் காணியில் தென்னைப் பயிர்ச் செய்கை செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது காணிகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றது. மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்காகவே இப்படியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வறுமை ஒழிப்பு என்பது எமது கொள்கைகளின் பிரதான விடயமாகும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்கில் அதிகளவு வறுமை உள்ளது. இந்நிலைமையில் இருந்து மீள வேண்டும். போரால் அனைத்தையும் இழந்துள்ள மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த வேண்டும். போர் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்தும் வாழ்க்கையில் மாற்றம் இல்லை. வறுமையை ஒழிக்காமல் நாட்டின் அபிவிருத்தி பற்றிச் சிந்திக்க முடியாது.தென்னை பயிர்செய்கையை சரியாகக் கையாண்டால் எதிர்காலத்தில் [illegible] பொருளாதாரம் இப் [illegible] வரக்கூடும் என்றார். (ம-7)

## செம்மணி ...

களுக்குமான நிலையத்தின் பிரதிநிதிகளுடனும் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளனர். (ம-7,104)

## எதிர்வரும் ...

குற்றப் புலனாய்வுப் பிரிவின் மனிதக் கொலை விசாரணைப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி யாழ்.நீதவான் நீதிமன்றில் செய்த விண்ணப்பத்தின் பிரகாரம் சான்றுப் பொருட்களை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மதியம் 01.30 மணி முதல் மாலை 05 மணி வரையில் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மக்களின் பார்வைக்காக சான்றுப் பொருட்கள் வைக்கப்படவுள்ளன.

செம்மணிப் புதைகுழிகளிலிருந்து இதுவரையில் புத்தகப்பை, சிறுவர்களின் காலணிகள், குழந்தையின் பால் போச்சி, வளையல்கள் உள்ளிட்ட 54 சான்றுப் பொருட்கள் மீட்கப்பட்டு அவை நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

அவற்றினைப் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தி அவற்றை அடையாளப்படுத்தக் கூடியவர்கள் நீதிமன்றுக்கோ குற்றப்புலனாய்வுத் துறையினருக்கோ தெரிவிப்பதன் ஊடாக விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதேவேளை சான்றுப் பொருட்களைப் பார்வையிட வருவோருக்கான கட்டுப்பாடுகள் தொடர்பில் இன்று சனிக்கிழமை அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லஞ்சம் வாங்குவதை கனவில் கூட நினைக்காத நாடாக இலங்கை மாறும்!

## ஜனாதிபதி அநுரகுமார நம்பிக்கை



(கொழும்பு)

**லஞ்சம் வாங்குவதை நினைத்துப் பார்க்க முடியாத நாடாக இலங்கை விரைவில் மாறும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

மாலைதீவில் வசிக்கும் இலங்கை சமூகத்தினரைச் சந்திக்கும் நிகழ்வு நடைபெற்றபோதே ஜனாதிபதி இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

சட்டம் அனைவருக்கும் சமமாக அமுல்படுத்தப்படும். லஞ்சம் கொடுக்கவும், வாங்குவதற்கும் பயப்பட வேண்டும். மக்கள் சட்டத்திற்குப் பயப்பட வேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற ஒரு அரசை நாங்கள் கட்டியெழுப்புவோம்.

முன்னாள் ஐஜிபி, முன்னாள் கடற்படைத் தளபதி, சிறைச்சாலைகள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள குடிவரவு, சுங்க திணைக்களங்கள் உட்பட பல உயர் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். முந்தைய அரசாங்கங்களால் ஆட்சி மாற்றங்களின் போது தடுக்கப்பட்ட பல்வேறு வழக்குகளை விசாரிக்க புதிய சி.ஐ.டி குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எங்கள் சட்டங்களின்படி ரூ. 2.6 மில்லியன் நிதி மோசடிக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் நமது கணக்கீடுகளை மேற்கொண்டால், சிலர் பல வாழ்நாள் சிறைத்தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் என்றார். (நி)

# மணல் அகழ்வுக்கு எதிராக விழிப்புணர்வுப் போராட்டம்

## மன்னார் இளையோர் அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

பல்தேசிய கம்பனிகளின் கனியவளச் சுரண்டலால் பாதிக்கப்படும் மன்னார் மாவட்டத்தின் மக்கள் இருப்பையும் பூர்வீக நிலத்தையும் பாதுகாக்க மன்னார் மாவட்ட இளையோர் ஒன்றிணைந்து எதிர்வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் அடையாள விழிப்புணர்வு போராட்டம் ஒன்றை முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

யாழ் ஊடக அமையத்தில நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர்.மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களில் ஒன்றாக மணல் இருக்கின்றது. இந்த மணல் விசேடமாக இல்மனைற் கனிமத்தைக் கொண்டதாக இருப்பதனால் அதற்கு உலகளவில் பரந்துபட்ட கேள்வி இருந்து வருகின்றது.

இந்நிலையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பல்தேசிய நிறுவனம் ஒன்று குறித்த இல்மனைட் மணலை அகழ்ந்து எடுக்க முயற்சித்து வருகின்றது.

அதற்கான அனுமதிகள் இழுபறியில் இருந்து வந்த நிலையில் இந்த அரசாங்கத்தினால் அது வழங்கப்படுவதற்கான சூழல் உருவாகியுள்ளது.

இவ்வாறு பல்தேசிய நிறுவனங்கள் மன்னாரின் இல்மனைட் மணலை அகழ்ந்தெடுத்தால் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மன்னாரின் மக்கள் வாழ் நிலங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்து மக்களின் இருப்பையும் கருவறுத்துச் சென்றுவிடும் நிலை உருவாகும்.

இந்த அழிவைத் தடுப்பதற்கும் எமது பூர்வீக நிலத்தையும் மக்கள் இருப்பையும் பாதுகாக்கவே கரு. நில பாதுகாப்பு என்ற கருப்பொருளுடன் போராட்டம் ஒன்றைச் செய்ய நாம் வீதிக்கு இறங்கவுள்ளோம். எனவே எமது இந்தப் போராட் டத்துக்கு குறிப்பாக இளைஞர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம். (8-33-104)

# எரிவாயு விலையில் மாற்றமில்லை


(கொழும்பு)

ஓகஸ்ட் மாதத்தில் சமையல் எரிவாயு விலையில் மாற்றம் இல்லை என எரிவாயு நிறுவனங்கள் அறிவித்துள்ளன. தற்போது விற்பனை செய்யப்படும் விலையிலேயே தொடர்ந்தும் லிட்ரோ, லாச்சப்ஸ் சமையல் எரிவாயு கொள்கலன்கள் விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (நி)


# ஒன்பதாம் ஆண்டு நினைவு நாள்

அமரர் வையிரமுத்து

செல்வராசா



தோற்றம் 23.04.1947 மறைவு 02.08.2016

நீங்காத நினைவுகளால்
நீர்மல்கும் கண்களுடன்
உற்றார் உறவினர்கள்
உலகோர் ஏங்காத நாளில்லை
ஏன்பறந்தீர் எம்மைவிட்டு
ஆண்டு ஒன்பது போனாலும்
இவ்வுலகில் நாம்வாழும் வரை
உங்கள் நினைவுகள் நீங்காமல்
நிலைத்திருக்கும்.

பண்டித்தறை,
நெல்லியடி,
கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்

(c-3548)


# இராசிபலன்

02.08.2025
ஆடி17 , சனிக்கிழமை
அட்டமி காலை 7.34மணிவரை

விசாகம் முழுவதும்
சுப நேரம் 3.03-4.33 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை

சந்திராஷ்டமம்: அச்சுவினி

வளவன்

**மேஷம்** பொதுவாழ்வில் புகழ் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**துலாம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பயணத்தால் பலனுண்டு, பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், உடல் நலன் சீராகும்.

**மகரம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொட்ட காரியம் வெற்றி பெறும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்** பணத்தேவைகள் எளிதில் கைகூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், மற்றவர்களின் உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணவரவு திருப்தி தரும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், உறவினர் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள்.

**மீனம்** உடல் நலனில் கவனம் தேவை, எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, வழிபாட்டல் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.

**நிம்மதி காண இரண்டு வழிகள் உண்டு. விட்டுக்கொடுங்கள் இல்லை விட்டு விடுங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து வழங்கும் 'தெய்வீக இசையரங்கு' இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வீணை இசையில் வீணை-அநுராகம் கவின்கலை நிலைய மாணவர்கள், மிருதங்கம்-செல்வன். சங்கவன் லோகேஷ்வரசர்மா, தபேலா-செல்வன்.மாதங்கன் லோகேஷ்வரசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-திருமதி.சிவானுஜா அகிலன், வயலின்-பத்மநாதன் சியாம் கிருஸ்ணா, மிருதங்கம்-ஞானவேல் வசந், கெஞ்சிரா-செல்வன் புவனேஸ்வரன் வேணுகாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (8)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது சபை அமர்வு அண்மையில் இடம்பெற்றது. குறித்த அமர்வில் முக்கியமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அந்த வகையில் செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரியும், ஐ.நா பேரவையின் நிபுணர் குழு செம்மணி புதைகுழி அகழ்வை மேற்பார்வை செய்ய வேண்டும் என்றும் செம்மணி மனித புதைகுழிக்காக செய்யப்பட்ட போராட்டத்தின் கோரிக்கைகளும் தீர்மானமாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் எள்ளங்குளம் மயானத்தின் 1.220 ஏக்கர் காணியினை இராணுவம் அத்துமீறி ஆக்கிரமித்துள்ளது. ஆகவே அந்த காணியில் இருந்து இராணுவம் விலகி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மயானத்தை கையளிக்க வேண்டும்.

மாணவர்களுக்கு கனரக வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்கு பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரமாகிய காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரையிலும் பாடசாலை முடியும் நேரமாகிய பிற்பகல் 1 மணி தொடக்கம் 2 மணி வரையிலும் எமது சபைக்குட்பட்ட பாடசாலைகள் அமைந்துள்ள வீதிகளினால் கனரக வாகனங்கள் பயணிப்பதை தடைசெய்ய வேண்டும்

எமது சபைக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களிலும் திருமண மண்டபங்களிலும் பொலித்தீன் பாவனையை தடைசெய்வது, வீதிகளில் கழிவுகளை வீசுபவர்களை இனங்கண்டால் அவர்களிடம் இருந்து அதற்கான கழிவகற்றல் செலவீனத்தை அறவிடு செய்வதென்றும் அதற்கு அவர்கள் உடன்படாதவிடத்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல், கட்டாக்காலி நாய்களினால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதனால் அவற்றை கட்டுப்படுத்தல் போன்ற பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (க-8-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 160 | 200 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 300 | 400 |
| தக்காளி | 180 | 200 | 150 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 320 | 300 | 300 | 240 |
| கோவா | 300 | 300 | 300 | 250 | 300 |
| கரட் | 400 | 400 | 350 | 350 | 450 |
| பூசணி | 100 | 120 | 100 | 100 | 120 |
| புடோல் | 100 | 100 | 100 | 100 | 150 |
| வாழைக்காய் | 100 | 130 | 100 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 150-300 | 350 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 | 120 | 120 | 180 |
| பாகற்காய் | 300 | 400 | 350 | 500 | 400 |
| வெண்டக்காய் | 150 | 100 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 200 | 280 | 350 |
| பயற்றங்காய் | 150 | 200 | 100 | 300 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 150 | 250 | 200 |
| பீற்றூட் | 150 | 150 | 250 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 550 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 600 | 350 | 600 |
| போஞ்சி | 800 | 750 | 800 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 250 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 60-120 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 200 | 80 | 150 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-200 | 150-210 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 500 | 900 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 350 | 250 | 450 |
| முள்ளங்கி | 50 | 150 | 150 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 120 | 200 |

## முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு

(அராலி)

முன்பள்ளி சிறார்களிற்கு 65 இலட்சம் நிதி ஒதுக்கீடு மூலம் சத்துணவு வழங்கும் திட்டம் மானிப்பாய் பிரதேச சபையால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஓர் அங்கமாக மானிப்பாய் மேற்கு அரும்புகள் முன்பள்ளி சத்துணவுத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

நிகழ்வில் வட்டார மக்கள் பிரதிநிதி கலொக் கணநாதன் உஷாந்தன், பிரதேச சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டு முன்பள்ளி சிறார்களிற்கு சத்துணவை வழங்கி ஆரம்பித்து வைத்தனர். (8-104)

## புதிய நிர்வாகம் தெரிவு

(கரணவாய்)

வடமராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக செ.ஸ்ரீவாசன், செயலாளராக ஆ.சிவாநாதன், பொருளாளராக சு.சிவகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (8-60)




## கா! நல்லைக் குமரேசனே!

அஞ்சுதலைக் கொண்டவரு மாறுதலைப் பாலகனை
அகமுருகி யடிபற்றினால்
விஞ்சுவினை துஞ்சிவிழ வீழ்த்தியடித் தாளுபவன்
வேலவனின் மேன்மையிதுவே
தஞ்சமென நின்றவரைத் தக்கதரு ணத்திலவன்
மிக்கவருள் கூட்டியொளிர்வான்
நஞ்சுவிழி மாதர்புடை சூழவரு வேளனவன்
நவநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்.

## திருமுருகன் துணை

ஓடி ஓடி நாம் நாடித்தேடி ஓடி
வந்தோம் எம் முருகனைக் கண்டு களிக்க
கண்டு கொண்டோம் அவனை நல்லூர்
பதிதனிலே, அவனை காண கண்
கோடி வேண்டுமையா, முருகா ஓம்
முருகா, நாடித்தேடி ஓடி வந்து தொழுதல்
நலம் பல பெற்று உயர வாழலாம்
நாடித்தேடி ஓடி வராவிட்டால் உனை
காணமுடியுமா, அருள் பெற முடியுமா?
நான் பாடி ஆட பல பிணியும் தீருமே
கண்கள் குளிர வணங்குகிறோம் பாருமையா

திருமுருகன், கலாபூசணம்
நவில் சுப்பிரமணியம், நீர்வேலி

## எல்லோரும்

நல்லூரிலுறைபவனே நடு
நாயகமாய் நின்றருள் புரிபவனே!
கல்லூரும் நீர் போல் கசிந்து
உருகி வேண்டுகின்றேன்!
எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டியே
பாடினேனே வேல் முருகையா!
எந்நாளும் என் நாவிலிருந்து
உன்னைப் பாட அருள் புரிவாய்!

இராம ஜெயபாலன்

## பக்தர்க்கு அருளும் நல்லூரான்

வெள்ளி மயில் ஏறி வந்து
வேண்டும் வரம் தருவான்
வள்ளி தெய்வ மங்கை யுடன்
வந்து அருள் புரிவான்
பள்ளம் வரும் வெள்ள மென
பெருகும் துயர் துடைப்பான்
பள்ளி கொண்டு நல்லூர் தனில்
பக்தர்க் கருள் கொடுப்பான்

விஜயகண்ணன்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான இந்தியாவின் முதல் தவணை நிதி விடுவிப்பு

(கொழும்பு)

மஹவ - அநுராதபுரம் ரயில் மார்க்கத்திற்கு சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு அமைப்பை நிறுவுவதற்காக இந்திய அரசாங்கத்தால் முதல் தவணையாக 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் 2025 ஏப்ரல் மாதத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் கலந்துரையாடி ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் 14.89 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாக வழங்க முன்மொழிந்திருந்தாலும், 2024 டிசம்பரில் இலங்கை ஜனாதிபதியின் இந்தியாவிற்கு அரச முறைப் பயணத்தின்போது இது மானியமாக மாற்றப்பட்டது.

இந்திய உதவியுடன், வடக்கு மாகாண ரயில் மார்க்கத்தில் உள்ள தண்டவாளங்கள் மணிக்கு 100 கி.மீ வேகத்தில் ரயில் இயக்கத்தை ஆதரிக்கும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், மேம்பட்ட சமிக்ஞை அமைப்பு மூலம் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், ரயில் சேவைகளின் செயல்திறனை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டத்திற்கான அடிப்படைப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், 2026 ஒகஸ்ட் மாதத்திற்குள் இதனை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. (நி)

# மின் பாவனை அதிகரிப்பு

## இலங்கை மின்சாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஒரு தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு அதிகரித்துள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒரு தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு 700 kWh ஆக அதிகரித்துள்ளது.

இது மின்சார தேவையின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

2023 ஆம் ஆண்டில் ஒரு தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு 642 kWh ஆகவும் 2024 ஆம் ஆண்டில் 693 kWh ஆகவும் காணப்பட்டுள்ளது.

ஆனால் 2025 ஆம் ஆண்டில் தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு அதிகரித்துள்ளது.

மின்சாரத்தை பயன்படுத்தும் அளவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நாட்டின் டிஜிற்றல் மாற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

இது அரசாங்கத்தின் நிலையான எரிசக்தி மாற்றத்திற்கான உறுதிப்பாட்டையும் மேம்படுத்துகின்றது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (நி)

லங்கா மஹறால் (PVT) LTD
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(1379)
UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180
Western Union WU MoneyGram. Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308

# திருத்தம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் 31.07.2025 திகதிய வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட Invitation Bid 2025/11 என்னும் கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்ட வேலை அட்டவணை (Bid ID, Grade Required) இல் பின்வரும் திருத்தம் செய்யப்படுகின்றது.

| BID ID | Description of work | Grade Required |
| --- | --- | --- |
| 2025/NP/TSM/02 | Establishment of Movable Food Stalls & Beautification works at Akkarai Beach | C8 or above (Building) |

**தலைவர்,**

**பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.**

(C-...32)

# INVITATION FOR BIDS 2025/06

# PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA

1. The Chairman, Local Authority Procurement Committee and Divisional Procurement Committee on behalf of the Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for works contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of **Road construction** for grade mentioned in the table below.
4. To be eligible for goods contract award the successful bidder shall not have been Blacklisted by any other acceptable Institution.
5. Bidders shall be a Sri Lankan citizen or private entity who may have a valid business Registration / company registration and valid registration certificate issued by respective Authority for the supply of respective Items. Bidder should have in the relevant field in Sri Lanka as required in the bidding documents
6. Qualification' requirements for works contract are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
7. Interested bidders may obtain further information from address given below in 8 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | |
| --- | --- |
| Document Issuing/Purchasing Period | From **02.08.2025 until 21.08.2025** |
| Pre-Bid Conference | **At 10.30 A.M on 12.08.2025** |
| Closing and Opening of Bids | **At 10.30 A.M on 22.08.2025** |

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security: Amount (Rs.) | Required Bid Security: Validity Period |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 01 | SD/NP/MU/PTKPS/2025/01 | Construction of Visvamadu Market Internal Road | Stamp Duty | 3.12 | 84 | C9 or above (High way) | 2,000.00 | 9-Oct-2025 | 50,000.00 | 6-Nov-2025 |

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Contract/ Supply Period (Days) | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 02 | NP/14/44(04)/Acc/Purchasing/Dust Bins/2025 | Multi Colour Dust Bins | Council | 45 | 1,000.00 | 9-Oct-2025 | 20,000.00 | 6-Nov-2025 |
| 03 | NP/14/44(04)/Acc/Purchasing/Street Light/2025 | Purchasing of Street Light | Council | 45 | 1,000.00 | 9-Oct-2025 | 20,000.00 | 6-Nov-2025 |
| 04 | NP/14/44(04)/Acc/Purchasing/Bike/2025 | Purchasing of Motor Bike | Council | 45 | 1,000.00 | 9-Oct-2025 | 20,000.00 | 6-Nov-2025 |

8. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:0212291023, email: pkips@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
9. Bids (Original & Duplicate) for S/No 1 must be delivered to the **Chairman, Divisional Procurement Committee,Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu and 9.Bids (Original & Duplicate) for S/No 2 - 4 must be delivered to the Chairman, Local authority Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** on or before **10.30 A.M as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.**
10. Pre-Bid Conference will be held at Conference Hall, **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** commencing at **10.30 AM** as stated in table above.
11. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Local Authority Procurement Committee & Divisional Procurement Committee,**
**Puthukkudiyiruppu Pradeshiya Sabha,**
**Paranthan Road,**
**Puthukkudiyiruppu.**
**02.08.2025**


(C-3547)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உடைந்து விழுந்த இராட்டினம்!
### சவுதி பூங்காவில் திக்... திக்... நிமிடங்கள்!





(ஜெர்த்தா)
சவுதி அரேபியாவில் உள்ள ஒரு கேளிக்கை பூங்காவொன்றில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இராட்டின மொன்று திடீரென உடைந்து விழுந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அல் ஹடா பகுதியில் உள்ள க்ரீன் மவுண்டன் பூங்காவில் நடந்த இந்த கோரமான சம்பவத்தில் குறைந்தது 23 பேர் படு காயமடைந்தனர் எனவும் அவர்களில் சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ தினத்தன்று 360 டிகிரிஸ் என்று அழைக்கப்படும் அந்த இராட்டினத்தின் நடுவில் இருந்த கம்பம் திடீரென உடைந்து, இருக்கைகள் பயங்கர சத்தத்துடன் கீழே விழுந்தன.


இந்த விபத்தின் போது இராட்டினத்தில் இருந்தவர்கள் அலறி துடித்ததாகவும், கீழே விழுந்த போது அவர்களால் வெளியேற முடியவில்லை என்றும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இராட்டினத்தின் கம்பம் வேகமாகச் சுழன்று சில பார்வையாளர்களை தாக்கியதாகவும், இராட்டினத்தின் இருக்கைகள் தரையில் விழுந்ததால் பலர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்துக்கான சரியான காரணத்தைக் கண்டறிய அதிகாரிகள் அவசர விசாரணையை தொடங்கியுள்ளனர்.

இது குறித்த வீடியோ இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 30 ஆண்டுகள் உறைநிலையில் இருந்த கருவில் பிறந்த குழந்தை



(வோஷிங்டன்)
30 ஆண்டுகளுக்கும் மேலாக உறைந்த நிலையில் இருந்த ஒரு கருவில் இருந்து குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

அமெரிக்காவின் ஒஹியோவில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்த சம்பவம் ஒரு புதிய உலக சாதனையாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக ஐவிஎஃப் (IVF) சிகிச்சையில், கருத்தரித்த கருக்கள் உறைந்த நிலையில் பாதுகாத்து வைக்கப்பட்டு, பின்னர் கருத்தரிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மியன்மாரில் முடிவுக்கு வரும் இராணுவ ஆட்சி

(நைப்பிதோ)
மியன்மாரில் 4 ஆண்டாக உள்ள இராணுவ அவசரநிலை முடிவுக்கு கொண்டு வரப்பட்டு அடுத்த 6 மாதங்களுக்குள் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படும் என இராணுவ அரசாங்கம் அறிவித்துள்ளது.

இராணுவ ஆட்சித்தலைவர் மின் ஆங் ஹ்லியாங் செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், தேர்தலில் மோசடி நடைபெற்றதால் தான் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.

எனவே நேர்மையான முறையில் தேர்தல் நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவரிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்படும்.

இதனால் அடுத்த 6 மாதங்களுக்குள் பாராளுமன்ற தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக 4 ஆண்டாக உள்ள இராணுவ அவசர நிலை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மியான்மரில் கடந்த 2020இல் நடந்த தேர்தலில் ஆங் சான் சூகியின் கட்சி பெரிய வெற்றி பெற்ற நிலையில் தேர்தலில் மோசடி நடந்ததாகக் கூறி 2021ஆம் ஆண்டு அரசை கலைத்துவிட்டு இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. அவசர நிலையை அறிவித்து இராணுவத் தளபதி மின் ஆங் ஹ்லியாங் அதிகாரத்தை கைப்பற்றினார். இதையடுத்து ஆங் சான் சூகி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)





## ரஷ்யாவில் ஆட்சி மாற்றம்
## கூட்டாளி நாடுகளிடம் உக்ரைன் கோரிக்கை



(கீவ்)
ரஷ்யாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த உதவுமாறு, தனது கூட்டாளி நாடுகளிடம் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

பனிப்போர் காலத்தின் ஹெல்சிங்கி ஒப்பந்தத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்த மாநாட்டில் காணொளி மூலம் உரையாற்றிய அவர், ரஷ்யாவால் போரை நிறுத்த தள்ளி வைக்கமுடியும் என்று நம்புவதாகத் தெரிவித்தார்

ஆனால், ரஷ்யாவில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த உலக நாடுகள் முயற்சி மேற்கொள்ளாவிட்டால், போர் முடிந்த பிறகும், ரஷ்யா தனது அண்டை நாடுகளை உறுதியற்ற நிலைக்குத் தள்ளும், என்றும் அவர் எச்சரித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ட்ரம்பின் மிரட்டலுக்கு பின் தாக்குதலை தீவிரப்படுத்தியது ரஷ்யா!

## ஏவுகணைத் தாக்குதலில்

- உக்ரைனில் 16 பேர் உயிரிழப்பு
- 155 பேர் படுகாயம்

(மொஸ்கோ)

**அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் மிரட்டலுக்குப் பிறகு உக்ரைனில் ரஷ்யா தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.**

தலைநகர் கீவின் பல பகுதிகளில் ஏவுகணை மற்றும் ட்ரோன்கள் மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது.

கீவ் மீது நேற்று முன்தினம் இரவு முழுவதும் 309 ட்ரோன்கள் மற்றும் 8 குரூஸ் ஏவுகணை மழை பொழிந்தது.

இதில் 16 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 155 பேர் படுகாயமடைந்தனர்.

இறந்தவர்களில் ஆறு வயது சிறுவனும் அவனது தாயும் அடங்குவர்.





காயமடைந்தவர்களில் 12 குழந்தைகளும் அடங்குவர் என கீவ் மேயர் விட்டாலி கிளிட்ச்கோ தெரிவித்தார்.

இதற்கிடையே டொனெட்ஸ்கின் முக்கிய கிழக்குப் பகுதியில் உள்ள மலைப்பாங்கான நகரமான சாசிவ்வைக் கைப்பற்றியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. ஆகஸ்ட் 8 ஆம் திகதிக்குள் போர்நிறுத்தம் செய்யாவிட்டால் ரஷ்யா மீது 100% வரி விதிப்போம் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (நி)

## உலக அமைதியை வலியுறுத்தி 12 வயது சிறுவன் பயணம்

(டோக்கியோ)

அணுகுண்டு வீச்சால் பாதிக்கப்பட்ட ஹிரோஷிமாவில், உலக அமைதியை வலியுறுத்தி 12 வயது சிறுவன் மேற்கொண்டுள்ள பயணம் நம்பிக்கை கீற்றொளியை விதைத்துள்ளது.

ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டதன் 80ஆவது ஆண்டு விழா வரும் 6ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை யொட்டி, சசாகி என்ற சிறுவன், நடை பயணமாக சென்று போரின் தீமைகள் குறித்து எடுத்துரைத்து வருகிறார்.

கடந்த கால தவறுகளை



எதிர்கால சந்ததிக்கு தெரியப்படுத்துவது அவசியம் எனக் கூறும் சசாகி, போர் எவ்வளவு மோசமானது என்பதை அனைவரும் உணர வேண்டும் என்கிறார்.

உலகமெங்கும் ஆங்காங்கே போரின் துயர சுவடுகள் தென்படும் இந்த காலகட்டத்தில் இச் சிறுவனின் முயற்சி கவனத்தை ஈர்த்துள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகஸ்ட் மாத இராசி பலன்கள்

## காரிய வெற்றி கிடைக்கும்!



**மிதுனம்: கிரகநிலை** - இராசியில் புதன், குரு, சுக்கிரன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் கேது - சுக ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - பாக்கிய ஸ்தானத்தில் சனி (வ), ராகு என கிரக நிலைகள் உள்ளன.

**கிரகமாற்றம்:** 03.08.2025 அன்று இராசியில் இருந்து புதன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17.08.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து சூரியன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

21.08.2025 அன்று சுக்கிரன் இராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25.08.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து புதன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் சாதகமான பலன்கள் கிடைக்கும். மனதிருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்தி சாதுரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்பு கூடும். பாராட்டு கிடைக்கும்.

உடல் சோர்வு உண்டாகும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை தீட்டுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயற்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். புதிய பதவி அல்லது பொறுப்புகள் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குழந்தைகள் உற்சாகமாக காணப்படுவார்கள். பெண்களுக்கு மனதிருப்தியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவீர்கள்.

அரசியல்வாதிகள் கட்சித் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவார்கள்.

கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். மாணவர்கள் பாடங்களை கவனமாகப் படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும்.




**மிருக சிரீஷம் 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் பகைவர்களின் தொல்லை குறையும். நீதிமன்றத்தில் இதுவரை அலைக்கழித்த வழக்குகள் முடிவடையும். உங்கள் சொத்துக்கள் மீண்டும் உங்கள் கைக்கு வந்து சேரும். வியாபாரம் சிறந்து, வருமானம் பெருகும். பணம் கையில் சரளமாகப் புரளும். கூட்டுத்தொழில் உறுப்பினர்கள் இன்முகமாய்ப் பழகுவார்கள்.

**திருவாதிரை:** இந்த மாதம் சிலர் தங்கள் வசிப்பிடங்களை மாற்றுவர். அடிக்கடி வீடு மாறுவார்கள். பயணங்களின் போது கவனமாக இருக்க வேண்டியது அவசியம். பயணத்தின் போது கைப்பொருள் தொலைந்து போக நேரும். சட்டவிரோதமான காரியங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. இல்லையென்றால் வம்பு வழக்குகளில் சிக்கிக்கொள்ள நேரும்.

**புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்:** இந்த மாதம் கணக்கு வழக்குகளை சரியாக வைத்துக்கொள்ளாவிட்டால், அரசாங்கத்தால் தொல்லைகள் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளால், பிரச்சினைகளை சந்திப்பார்கள். யாரிடமும் கையூட்டுப் பெறுவதை தவிர்க்க வேண்டும். வெளிநாட்டுப் பயணம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

**பரிகாரம்:** பெருமாளை புதன் கிழமைகளில் அர்ச்சனை செய்து வணங்க திருமண தடை நீங்கும். குடும்பத்தில் சுபிட்சம் உண்டாகும்.

சந்திராஷ்டம தினங்கள்: ஆகஸ்ட் 08, 09.

அதிர்ஷ்ட தினங்கள்: ஆகஸ்ட் 17, 18.

## பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும்!



**கடகம்: கிரகநிலை** - இராசியில் சூரியன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது - தைரிய வீரிய ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - அஷ்டம ஸ்தானத்தில் சனி (வ), ராகு - அயன சயன போக ஸ்தானத்தில் புதன், குரு, சுக்கிரன் என கிரக நிலைகள் உள்ளன.

**கிரகமாற்றம்:** 03.08.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து புதன் இராசிக்கு மாறுகிறார். 17.08.2025 அன்று இராசியில் இருந்து சூரியன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.08.2025 அன்று சுக்கிரன் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார்.

25.08.2025 அன்று இராசியில் இருந்து புதன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் எடுத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். சுப செலவுகள் ஏற்படும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடுவதில் பின்னடைவு ஏற்படும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும். தொழில் வியாபாரம் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள்.

உத்தியோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். உத்தியோகஸ்தர்கள் புத்தி சாதுரியத்தால் மேல் அதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பார்கள். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள்.

பெண்களுக்கு காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். அரசியல்வாதிகள் கோஷ்டிப் பூசலையும் தாண்டி சாதிப்பீர்கள். கலைத்துறையினர் யதார்த்தமான படைப்புகளால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பார்கள். மாணவர்களுக்கு புத்திசாதுரியம் வெளிப்படும். கல்வியில் இருந்த தொய்வு நீங்கும்.

**புனர் பூசம் 4ம் பாதம்:** இந்த மாதம் யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம்.




எந்த விடயமாக இருந்தாலும் முடிவெடுக்க முடியாமல் கஷ்டப்படுவீர்கள். மனதில் குழப்ப நிலை நீடிக்கும். மறைந்திருக்கும் எதிரிகளால் தொல்லை ஏற்பட்டாலும் அவர்களால் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்திவிட முடியாது.

**பூசம்:** இந்த மாதம் கடுமையாக உழைத்தால் மட்டுமே வெற்றிகளை குவிக்க முடியும். கணவன் - மனைவி உறவு விரிசல் காணும். பணப் பற்றாக்குறையால், குடும்பத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போகும். இதனால் குடும்பத்தினரின் வெறுப்புக்கு ஆளாக நேரும். உங்கள் ஆரோக்கியமும் குறைவாக இருக்கும். மருத்துவச் செலவுகள் எகிறும்.

**ஆயில்யம்:** இந்த மாதம் உறவுகள் பகையாகும். எதிரிகளின் திட்டம் உங்களை வேதனைக் குள்ளாக்கும். அலுவலக வேலையில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் தொல்லை இருக்கும்.

உங்களிடம் குறை கண்டு பிடித்து உங்களுக்கு தண்டனை தருவார்கள். வேண்டாத இடமாற்றம் வரும்.

உடன் வேலை செய்பவர்களின் ஒத்துழைப்பும் இல்லாமல் போகும்.

**பரிகாரம்:** அம்மனுக்கு அரளிப்பூ அர்ப்பணித்து அர்ச்சனை செய்து வணங்க எல்லா காரியங்களும் கைகூடும். எதிர்ப்புகள் நீங்கும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** ஆகஸ்ட் 10, 11, 12.

**அதிர்ஷ்ட தினங்கள்:** ஆகஸ்ட் 19, 20.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு

# சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை வழங்குங்கள்

## வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு

(கண்டாவளை)

**இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்குமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்றைய தினம் கிளிநொச்சி பேருந்து நிலையம் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.**

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவானது தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வினை நோக்கிய பயணத்தினை பல்வேறு மட்டங்களில் முன்னெடுத்து வருகின்றது.

அதன் அடிப்படையில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ஆம் திகதி அடையாளப்படுத்தப்பட்ட 100 நாள் செயற்றிட்டம் என்ற அடிப்படையில் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்குள் மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வினை முன்வைத்து தொடர் மக்கள் அணி திரள் செயற்பாடுகளின் ஊடாக பல்வேறு மட்டங்களிலும் மக்களின் குரல்களை ஒலிக்கச் செய்திருந்தது.

அதன் தொடர்ச்சியாக 2025 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி தொடக்கம் கார்த்திகை மாதம் எட்டாம் திகதி வரை தொடர்ச்சியான 100 நாட்களும் சுழற்சி முறையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களிலும் மக்கள் அணி திரட்சியுடன் இணைந்து சமஷ்டி முறையிலான தீர்வை கோரும் மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இப் போராட்டத்தின் முதல் நாள் நேற்றுக் காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி நகரத்தின் மத்திய பேருந்து நிலையத் திற்கு முன்பாக இடம் பெற்றது.

இதில் சமூக செயற்பாட்டாளர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பொது மக்கள், சங்கங்கள், சம்மேளனங்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள், நலன் விரும்பிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (8-315)



# கடும் வரட்சியால் குடிநீர் நெருக்கடி

# கால்நடைகளும் பாதிப்பு!

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அக்கராயன் ஐயனார் குடியிருப்பு, கொங்காதரன் குடியிருப்பு, இன்மாஸ் நகர் கோனாவில் ஆகிய கிராமங்களில் நிலவும் வரட்சி காரணமாக குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குடிநீர் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடியை சந்தித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

அதே போல் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கிளாலி பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான கிணறுகளின் நீர் உவர் நீராகவும், மண் நிறத்திலும் காணப்படுகிறது. இதனால் பொது மக்களால் குறித்த நீரை பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். இருப்பினும் வேறு வழியின்றி குடிப்பதனை தவிர இதர தேவைகளுக்கு அந்த நீரையே பயன்படுத்தி வருகின்றனர்.

கடும் காவி நிறத்தில் உள்ள நீரில் ஆடைகளை கழுவுதன் மூலம் அவை நிறம் மாறி அழுக்கு ஆடைகள் போன்று காணப்படுகிறது எனவும் பொது மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இதனைவிட வருடம் முழுவதும் குடிநீர் நெருக்கடிகளை எதிர் கொள்ளும் பிரதேசமாக பூநகரி பிரதேசம் காணப்படுவதுடன் அதிகமான கிராம அலுவலர் பிரிவுகளில் குடிநீர்த்தட்டுப்பாடு நிலவி வருகின்றன.

தற்போதைய வரட்சி காரணமாக தொடரும் குடிநீர் நெருக்கடிகளால் குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குடிநீர் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடியை சந்தித்து வருகின்றனர். குறிப்பாக கால்நடைகள் கூட நீர் தேடி அலையும் நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (8 -315)

# பொலிஸ்மா அதிபரின் வாகனம் விபத்து



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் முல்லை வீதியின் இரண்டாவது மைல்கல் பகுதியில் கட்டாகலி மாடுகள் திடீரென்று வீதிக்கு குறுக்கே சென்றமையால் வடக்கு மாகாண பொலிஸ்மா அதிபரின் வாகனம் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் இரண்டு கால்நடைகளும் உயிரிழந்துள்ளன.

தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் நேற்று புதியதாக சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு திறந்து வைப்பதற்காக சென்ற பொழுதே குறித்த சம்பவம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (8-316-315)

# தென்னங்கன்றுகள் வழங்கல்



(மன்னார்)

வடக்கு தென்னை முக்கோண வலய அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தலைமையில் இடம் பெற்ற குறித்த விசேட கூட்டத்தில், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், பிரதி அமைச்சர் உபாலி சமர சிங்க, பாராளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேசச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டதோடு மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்ட தெங்கு உற்பத்தியாளர்களுக்கான உரமானியம், உதவித் தொகை, பயனாளிகளுக்கான புதிய தென்னங்கன்று என்பன வழங்கி வைக்கப்பட்டதுடன் பனை அபிவிரு த்தி சம்பந் தமான நடவடி க்கை மேற்கொள்ளவும் [illegible]

# யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப் பயிற்சிகள் அறிமுக வுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுபட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர, எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும். பயிற்சிகளில் 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெறலாம்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகைதந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் K.R.முனிரத்தினம் வழங்கவுள்ளார். தொடர்புகளுக்கு 021 222 2772, 076 857 1395. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடைகளில் குடற்புழுக்களால் ஏற்படும் பொருளாதார இழப்புக்களும் தீர்வுகளும்

## கால்நடை வளர்ப்பு - பகுதி - 01




Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

இலங்கையின் பாலுற்பத்திக் குறைவில், கால்நடைகளில் ஏற்படும் குடற்புழுக்களின் தாக்கம் முக்கிய பங்கை வகிக்கிறது. குடற்புழுக்கள் கால்நடைகளின் குடல், இரப்பை போன்ற உறுப்புகளில் இருந்துகொண்டு ஊட்டச்சத்துகளையும் இரத்தத்தையும் உறிஞ்சுவதுடன் ஏராளமான நோய்கள் ஏற்படுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துகின்றன. இவற்றை அழிக்கும் முறையான நீக்க மருந்துகளை எமது பண்ணையாளர்கள் வழங்குவதில்லை. குடற்புழு நீக்கம் என்னும் மிக முக்கியமான முகாமைத்துவ நடவடிக்கையை புறக்கணிப்பதால் பல கால்நடைகள் உற்பத்தி மட்டத்தில் குறைவடைவதுடன் கணிசமான அளவில் இறந்தும் போகின்றன. கால்நடை உற்பத்தியில் முன்னணியில் உள்ள பல நாடுகளில் இந்த குடற்புழு நீக்கம் தொடர்பாக பல முக்கியமான ஆய்வுகள் செய்யப்பட்டு காலத்துக்கு ஏற்ப முறையான மருத்துவ முறைகள், உணவூட்டல் மற்றும் ஏனைய முகாமைத்துவ முறைகளை மேம்படுத்தி குடற்புழுத் தாக்கத்தில் இருந்து தமது கால்நடைகளின் இழப்பை குறைக்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் மாரி மழையின் பின்னரான காலப்பகுதியில் ஆடு, மாடு, எருமை போன்ற கால்நடைகளில் கடும் வயிற்றோட்டம் மற்றும் பலவீனமான உடல் நிலையை அவதானிக்க முடியும். இது பெரும்பாலும் குடற்புழுக்களின் தாக்கத்தின் காரணமாகவே ஏற்படுகிறது. இங்கு நான் குடற்புழு என குறிப்பிடுவது : வட்டப் புழுக்கள் [round worms], கொக்கிப் புழுக்கள் [whip worm], நாடாப் புழுக்கள் [tape worms], தட்டைப் புழுக்கள் [flat worms] போன்ற அக ஒட்டுண்ணிகளையே.

கால்நடைகளில் மேற்படி குடற்புழுத் தாக்கம் வருடம் முழுவதும் காணப்படுகின்ற பொழுதிலும் மழைக்காலத்தின் பின்னரான காலப்பகுதியில் தான் அதிக அளவு அவதானிக்கப்படுகிறது.



மழைக்காலத்தில் நிலவும் ஈரலிப்பான சூழல் குடற்புழுக்கள் பெருகுவதற்கு சாதகமானது என்பதுடன் குடற்புழுக்களின் வாழ்க்கை வட்டம் பூர்த்தியாகக் கூடிய இடை நிலைக்காவிகளான [intermediate host] நத்தைகளின் பெருக்கமும் நிகழும் காலம் என்பதாலும் மழைக்கு பின்னரான மாதங்களில் அதிகளவில் குடற்புழு நோய்த்தாக்கத்தையும் இழப்புகளையும் அவதானிக்க முடிகிறது.


### குடற்புழு தாக்கத்தின் அறிகுறிகள்

◆ கால்நடைகளின் உடல் கடுமையாக மெலிவடையும்

◆ வயிறு பானை போல திரவம் நிறைந்து காணப்படும் [Ascitis]

◆ உரோமம் சிலிர்த்து காணப் படும். சிலவேளைகளில் உரோமம் வரண்டும் காணப்படும்

◆ கழுத்துப் பகுதி வீங்கியது போல





காணப்படும். இதனை தந்தம் வீங்கியது என்றும் சொல்வார்கள் [bottle jaw]

◆ கால்நடைகளின் கண் மடல், முரசு பகுதிகள் வெளிறிய இரத்தச் சோகை நிலமை அவதானிக்கப்படும் [Anemia]

◆ கழிச்சல் அவதானிக்கப்படும். சில வேளைகளில் இரத்தத்துடன் கூடியதான கழிச்சலை காண முடியும். தொடர்ச்சியான கழிச்சல் காரணமாக கால்நடைகளின் பின்புறம் எப்போதுமே ஈரமாகவும் சாணம்/புழுக்கை ஒட்டியபடி இருக்கும். ஆடுகளில் புழுக்கை சாணம் போலவும், கழிச்சலாகவும் காணப்படும். தொடர்ச்சியான கழிச்சல் மற்றும் இரத்த சோகை காரணமாக கால்நடைகள் பலவீனமாகி விழுந்தும் காணப்படும். இறுதி விளைவாக இறப்பு நிகழும். இளம் பராயத்து விலங்குகளில் இறப்பு அதிகளவில் நிகழும்.

பொதுவாக கழிச்சல் காரணமாக நீர்ச்சத்து மற்றும் கனியுப்புக்களின் இழப்பு ஏற்படுகிறது. இதன் காரணமாக கால்நடைகள் இறக்கின்றன. சிலவகை புழுக்கள் தமது கொக்கி போன்ற உறுப்பினால் கடித்து இரத்தத்தை அதிகளவில் உறிஞ்சுவதன் காரணமாக இரத்தசோகை நிலைமை ஏற்படுகிறது. குடல் போன்ற உறுப்புகளில் கடிப்பதன் காரணமாகவும் நச்சுப் பொருட்களை சுரப்பதன் காரணமாகவும் கடி காயங்களில் ஏற்படுகின்ற இரண்டாம் நிலை நுண்ணுயிர்களின் தொற்று காரணமாகவும் கால்நடைகளில் கழிச்சல் நிலைமை ஏற்படுகின்றது. இந்த காரணிகளை ஒன்று சேர்த்து அழிக்காத வரையில் மேற்படி கழிச்சல் நிலை தொடர்வதோடு விலங்குகள் பாதிப்படைகின்றன. பல இடங்களில் சிகிச்சைகள் வெறுமனே ஒரு காரணியை மாத்திரம் கருதி வழங்கப்படுவதால் குடற்புழு தாக்கத்தின் கழிச்சல் இலகுவில் குணமடைவதில்லை. குடற்புழு தாக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கால்நடைகளை மீட்டெடுக்க கடுமையான சிகிச்சை தேவை. அதற்கு அதிக செலவும் சிரமமும் அவசியம்.

சில புழுக்கள் நுரையீரலை தாக்குகின்றன. இவற்றின் தாக்கம் காரணமாக கால்நடைகள் இருமும். சளி போன்ற திரவங்கள் வடியும். சுவாசிக்க சிரமப்படும். இவற்றின் நீட்சியாக நியூமோனியா நிலை தோன்றி இறப்பு வரை செல்லக் கூடும். சில புழுக்கள் கால்களைத் துளைத்துக் கொண்டு சென்று அரிப்பு நிலையை தோற்றுவிக்கும். சில புழுக்கள் கால்நடைகளின் கண் பகுதிக்குள் பாதிப்பை தரவல்லன. மேலும் கால்நடைகளில் ஏற்படும் சில குடற்புழுக்கள் மனிதனையும் பாதித்து நோய்களை ஏற்படுத்தக்கூடியன. அதாவது கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வது அவற்றை மாத்திரமல்ல அவற்றுடன் தொடர்புடைய மனிதர்களின் ஆரோக்கியத்துக்கும் முக்கியமான நடவடிக்கையாகும்.

### குடற்புழுத் தாக்கத்தின் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற எதிர்மறை விளைவுகள்

◆ கால்நடைகளின் உற்பத்தித் திறன் பாதிக்கப்படுகிறது. [productivity]

◆ உணவு உட்கொள்ளுகின்ற ஆற்றல் குறைவடைகின்றது.

◆ உணவு மாற்றுத்திறன் குறைவடைகிறது. [Feed conversion ratio] கால்நடைகளில் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது அதாவது வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இருக்காது.

◆ கால்நடைகளின் இனப்பெருக்க ஆற்றல் பாதிக்கப்படும் குறிப்பாக சினை வேட்கைக்கு வருகின்ற அளவு குறைவடையும். வேட்கை அறிகுறிகளை [Heat signs] தெளிவாக அவதானிக்க முடியாத நிலை தோன்றுகிறது. மேலும் குடற்புழுத் தாக்கம் காரணமாக கால்நடை கள் சினைக்கு வருவதும் சினைப் படுதலும் குறைவடையும்.

◆ சில புழுக்கள் குடலில் முடிச்சுக்களை [pimplygut] ஏற்படுத்தி உணவு அகத்துறிஞ்சலை பாதிக்கின்றன. முக்கிய சுரப்புகளை சுரக்கும் இரப்பைக் கலங்கள் பாதிப்படைவதால் அவை சுரக்கும் அவசியமான சுரப்புகள் குறைவடைந்து உணவு செரிமானமும் பாதிக்கப்படுகிறது.

◆ தொடர்ச்சியான குடற்புழுத் தாக்கம் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி [immune suppression] குறைவடைந்து பல்வேறு நோய்களுக்கு இந்த கால்நடைகள் உட்படுகின்றன.

### கால்நடைகளுக்கு குடற்புழுத் தாக்கம் எப்படி ஏற்படுகிறது ?

கால்நடைகள் அதிகளவில் குடற்புழுக்களை மேய்ச்சலின் போதே பெற்றுக் கொள்கின்றன. குறிப்பாக நீர நிலைகளை அண்டிய மேய்ச்சல் தரைகளில் இளம் பராயத்து புழுக்கள் அதிகம் இருக்கும். அதுவும் வெயில் வர முன்னரும் மாலை நேரத்திலும் புற்களின் நுனிப்பகுதியில் அவை காணப்படும். அவற்றை உண்ணும் கால்நடைகள் தொற்றுக்கு உள் ளாகின்றன. மேலும் வயதான கால் நடைகளுடன் ஒன்றாக வளர்க்கப்படும் இளம்பராயத்துக் கால்நடைகள் தொற்றுக்கு உள்ளாகின்றன. சுகாதாரமில்லாத கால்நடைக் கொட்டகைகளின் காரணமாகவும் பொதுவான மேய்ச்சல் தரைகளினாலும் தொற்றுக்கள் ஏற்படுகின்றன. யாழ்ப்பாணம் தவிர்ந்த வடக்கு- கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் எரு விற்பனை செய்வதற்காக கால்நடை களின் சாணம் அப்படியே பட்டிகளில் பல நாட்கள் விடப்படுகின்றன. இதனால் பல கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக இளம் கால்நடைகள் அதாவது எரு விற்று பெறும் வருமானத்தை விட அந்த எருக்களால் பரவும் குடற் புழுக்களின் தாக்கம் காரணமாக ஏற்படும் பொருளாதார இழப்பு அதிகம். இதனைப் பல பண்ணையாளர்கள் உணர்வது கிடையாது. (தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய உதயத்திற்குப் பின்பும் சூரிய அஸ்தமனத்திற்கு முன்பும் உட்கொள்ளும் உணவு ஆயுளை அதிகரிக்கிறது. - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதேச வைத்தியசாலைகளை தரம் உயர்த்துங்கள்

இப்போது எங்கள் தமிழர் பிரதேசங்களில் மூன்று இடங்களில் சனக்கூட்டம் நிறைந்து காணப்படுகிறது.

ஒன்று சர்வதேச ரீதியில் பிரபலம் பெற்ற உணவுச்சாலைகள். இரண்டாவது வைத்திய சாலைகள் மற்றும் பார்மசிகள். மூன்றாவது மதுபானக் கடைகள்.

அதாவது வீடுகளில் சமைத்து உணவு உண்ணுகின்ற வழமை இல்லாமல் போய் கடைச் சாப்பாட்டுடன் சீவியம் போக்காட்டுகின்ற நடைமுறை வந்துவிட்டது.

இதன் காரணமாக வைத்தியசாலைகளில் கூடுகின்றவர்களின் எண்ணிக்கையும் பார்மசிகளில் மருந்து வாங்குகின்றவர்களின் தொகையும் கணிசமாக அதிகரித்துவிட்டது.

இந்த நிலைமை எங்களின் ஆரோக்கியத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது எனலாம்.

தவிர, வைத்தியசாலைகள் எனும்போது அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகள் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன.

இத்தகைய நிலைமையானது தங்கி வாழுகின்றவர்களின் தொகையை அதிகரிப்பதாக இருக்கும்.

அதிலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, நோயாளர்களால் நிரம்பியுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையானது மருத்துவர்களுக்கும் மருத்துவ ஊழியர்களுக்கும் கடும் மன உளைச்சலை ஏற்படுத்துவதுடன் நோயாளர்களுக்கும் திருப்தியான சேவையை வழங்க முடியாமல் போகும்.

எனவே நோய்த் தடுப்புப் பிரிவான சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் நோய்த் தடுப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்துவதுடன் பொருத்தமான முறைகளைப் பின்பற்றி சுகாதாரக் கல்வியையும் நோய்களை இனங்காணுகின்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

உண்மையில் ஆரம்பத்திலேயே நோய்களை இனம் காண்பது நோயின் ஆபத்திலிருந்து பாதுகாப்பதற்கான ஒரே வழியாகும்.

அதேநேரம் பிரதேச வைத்தியசாலைகளைத் தரம் உயர்த்தி, அவற்றை வினைத்திறனுடன் செயற்பட வைப்பதன் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்களைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

தவிர, யாழ்.போதனா வைத்தியசாலையின் சிகிச்சைப் பிரிவுகளை வெவ்வேறு இடங்களில் நிர்மாணித்து அவற்றை நிர்வகிப்பதானது உச்சமான சேவையை வழங்குவதற்குப் பேருதவியாக அமையும்.

உதாரணத்துக்கு சிறுவர் பிரிவு, கண் சிகிச்சைப் பிரிவு, மகப்பேற்று விடுதி போன்றவற்றை பொருத்தமான இடங்களில் இயங்க வைப்பதன் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்படுகின்ற சனநெருக்கடியைக் குறைக்கலாம்.

இதைவிடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே தொடர்ந்தும் கட்டிடங்களை அமைத்து மருத்துவப் பிரிவுகளை இயக்குவதென்பது பொருத்தமானதன்று.

எனவே இதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

# செம்மணிப் புதைகுழி விவகாரத்தை இராணுவம் மீது குற்றம் சுமத்த முயற்சி

## பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர

(கொழும்பு)

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை இராணுவத்தின் மீது குற்றம் சுமத்துவதற்கு ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை இராணுவத்தின் மீது குற்றம் சுமத்துவதற்கு ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பினர் சித்திரவதை முகாம்களை நடத்தினர். விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைவதற்கு இணக்கம் தெரிவிக்காத தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் உடல்கள் செம்மணிப் பகுதியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றார்.

மேலும் முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் குறிப்பிடுகையில் அவர் முப்படைகளின் அதிகாரிகள் மற்றும் முப்படையினர் சட்டத்துக்கு விரோதமான முறையில் செயற்பட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்படும் போது அவர்களை சிறைச்சாலையில் ஏனைய கைதிகளுடன் ஒன்றாக அடைக்காமல், வீட்டுக்காவலில் வைக்க முடியும். ஆனால் கைது செய்யப்பட்ட கடற்படையின் முன்னாள் தளபதி ஏனைய கைதிகளுடன் ஒன்றாக சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டுள்ளார்.

கடத்திக் காணாமலாக்கப்பட்ட விவகாரத்தில் தான் கடற்படையின் முன்னாள் தளபதி சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மாதம் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கும் நாடுகளை திருப்திப்படுத்துவதற்காகவா முப்படைகளின் முன்னாள் அதிகாரிகள் கைது செய்யப்படுகிறார்கள் என்ற சந்தேகம் காணப்படுகிறது என்றார். (ம-7)

# நாடு முழுவதும் விசேட சோதனை 1,107 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் ஆயிரத்து 107 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் நச்சு போதைப் பொருள் பரவுவதைத் தடுக்க, பொது மக்கள் பாதுகாப்பு விவகார அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் நேரடி மேற்பார்வையின் கீழ் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் வழிகாட்டுதலின் கீழ் முன்னெடுக்கப்படும் தேடுதல் நடவடிக்கையின் மற்றொரு கட்டம் நேற்று முன்தினம் (31) நடைபெற்றது.

இலங்கைப் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படைகளைச் சேர்ந்த மொத்தம் 5 ஆயிரத்து 866 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

அதன்படி 23 ஆயிரத்து 321 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ள நிலையில் 9 ஆயிரத்து 682 வாகனங்கள் மற்றும் 6 ஆயிரத்து 661 மோட்டார் சைக்கிள்கள் சோதனை செய்யப்பட்டுள்ளன.

இந்த விசேட தேடுதல் நடவடிக்கைகளின் போது போதைப்பொருள் குற்றங்களுக்காக ஆயிரத்து 107 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் குற்றங்களில் நேரடியாக ஈடுபட்ட 12 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்தச் சோதனை நடவடிக்கைகளின் போது இரு சட்டவிரோதத் துப்பாக்கிகள் மற்றும் பல்வேறு குற்றங்களுக்காகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 423 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் 7 பொலிஸார் பணி இடை நிறுத்தம்

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் 7 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அண்மையில் மாலைதீவு சென்று மீண்டும் நாடு திரும்பிய போது, அவருடன் சென்றிருந்த ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் 7 பொலிஸ் உத்தியோகத்தர்கள் விமான நிலைய டியூட்டி ப்ரீ வணிக நிலையங்களில் சட்டவிரோதமான முறையில் பொருட்களைக் கொள்வனவு செய்ததால் இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

# அராலியில் விபத்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அராலி சமுர்த்தி வங்கிக்கு அருகாமையில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சமுர்த்தி வங்கிக்கு அருகே பயணித்துக் கொண்டிருந்த துவிச்சக்கர வண்டி திடீரென செந்தழம் திரும்பிய வீதிக்குள் நுழைய திரும்ப முற்பட்டு வேகமாக திரும்பியவேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டுள்ளது. (ம-7,104)

# புத்தளத்தில் ரயிலில் சிசுவின் சடலம் கண்டெடுப்பு

புத்தளத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தொடருந்திலிருந்து கைவிடப்பட்ட நிலையில் பல நாட்கள் பழமையானதாக நம்பப்படும் சிசுவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

தொடருந்தின் கழிவறையைச் சுத்தம் செய்யும் போது துப்பரவுப் பணியாளர் ஒருவரால் குறித்த சிசுவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்போது துப்பரவுப் பணியாளர் தெமட்டகொடப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்ட கொழும்பு மேலதிக நீதவான் சுகன் காஞ்சன, சிசுவின் எச்சங்களைப் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி அதன் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மொசாட் 27

சொக்கன்

உலகம் முழுக்க யூதர்களுக்கு எதிராகச் செயற்படுகிறவர்கள் யாராக இருந்தாலும் லேசாகத் தட்டி வைத்தார்கள். அல்லது பொட்டலம் கட்டி இஸ்ரேலுக்கு அனுப்பிச் சிறையில் தள்ளினார்கள். அதுவும் பரமரகசியமாக.

ஓர் உளவுத்துறையை வலுவாக்குவதும் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்து நடத்துவதும் கிட்டதட்ட ஒரேமாதிரிதான். இங்கே மாநிலம் முழுக்கக் கிளைக் கழகங்கள் தொடங்குவதைப்போல அங்கே வெவ்வேறு நாடுகளில் உளவு நெட்வொர்க் அமைக்கவேண்டும். இரண்டிலும் அடிமட்டத் தொண்டர்கள் நிற்காமல் வேலை செய்தால்தான் வளர்ச்சி முன்னேற்றம் எல்லாமே.

ஆனால் இத்தனைக்குப்பிறகும் ஒரு கட்சி சட்டென்று ஆட்சியைப் பிடித்துவிட முடியாது. அதற்கு நல்ல வலுவான கூட்டணி தேவை.

ஐஸர் ஹரேல் யோசித்தார் நாம் யாருடன் கூட்டணி அமைத்தால் மொசாட்டின் எதிர்காலத்துக்கு நல்லது?

*1954* ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐஸர் ஹரேல் வோஷிங் டனுக்குப் பயணம் செய்தார். அங்கே அமெரிக்க உளவுத் துறை சி.ஐ.ஏ.வின் தலைவர் ஆலென் டுலெஸைச் சந்தித் தார்.

இஸ்ரேல் என்கிற தேசம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே அமெரிக்கா அதற்கு முழு ஆதரவு கொடுத்துக்கொண்டிருந்தது. இதற்குப் பல அரசியல் காரணங்கள் உண்டு. அதெல்லாம் இப்போது நமக்குத் தேவையில்லை. ஐஸர் ஹரேலும் ஆலென் டுலெஸூம் என்ன பேசினார்கள் என்பதைமட்டுமே நாம் கவனித்தால் போதும்!

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்தச் சந்திப்பின்போது ஆலென் டுலெஸூக்கு ஒரு கத்தியைப் பரிசாகக் கொடுத்தார் ஐஸர் ஹரேல். கைவேலைப்பாடுகள் நிறைந்த அந்தக் கலைப் பொருளில் ஓர் ஆழமான வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது.




இஸ்ரேலின் பாதுகாவலர்கள் எப்போதும் தூங்குவதில்லை. அந்த வாக்கியத்தைப் படித்த ஆலென் டுலெஸ் லேசாகச் சிரித்தார்.

ஐஸர் ஹரேலின் கைகளைப் பற்றிக் குலுக்கினார். உங்களோட நானும் தூங்காம விழித்துக் கொண்டிருப்பேன் என்றார்.

அதன்பிறகு அமரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ.வும் மொசாட்டும் ஜிகிரி தோஸ்த்களாகி விட்டார்கள். மொசாட்டின் வளர்ச்சியில் மிக முக்கியமான திருப்பு முனை இது.

காரணம் மொசாட் குடிசைத்தொழில் என்றால் சி.ஐ.ஏ பிரமாதமான பளபள கட்டடத்தில் இயங்கும் கார்ப்பரேட் ஆஃபீஸைப் போல அன்றைக்கு சி.ஐ.ஏ கையில் இருந்த ஆட்பலம் உளவுச் சாதனங்கள் தொழில்நுட்பம் எல்லாமே பிரம்மாண்டமானவை மொசாட் அந்த உயரத்தை எட்டிப் பிடிக்கப் பலவருடங்கள் ஆகும்.

அதனால்தான் சி.ஐ.ஏ.வுடன் கூட்டுச் சேர்ந்து செயற்படத் தீர்மானித்தார் ஐஸர் ஹரேல். இதன்மூலம் அமெரிக்கா என்கிற பெரிய இராட்சஸனின் துணையும் கிடைக்கிறது. அவர்களுடைய வழிகாட்டுதல் தொழில்நுட்ப ஆலோசனைகள் பயிற்சிகளின் மூலம் மொசாட்டை அடுத்த தளத்துக்குக் கொண்டு சென்று விடலாம்.

ஐஸர் ஹரேல் நினைத்ததுபோலவே சி.ஐ.ஏ. மொசாட்டுக்கு ஏகப்பட்ட பொன்முடிப்புகளை அள்ளி வழங்கியது. அதுவரை அமெரிக்க உளவாளிகளுக்கு மட்டுமே தெரிந்திருந்த இரகசியக் கருவிகள் மொசாட் ஏஜென்ட்களுக்கும் கிடைக்க ஆரம்பித்தன. அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் தொடங்கி எதிராளிக்குத் தெரியாமல் மாயத் திரைக்குப்பின்னே இயங்குவதற்கான நுட்பங்கள் வரை அவர்களுக்கு எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்தது சி.ஐ.ஏ.

இதுதவிர மொசாட் மற்றும் சி.ஐ.ஏ உளவுத் துறைத் தலைவர்கள் அதிகாரிகள் பல விடயங்களில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார்கள். இவர்கள் திரட்டிய தகவல்களை அவர்கள் பயன்படுத்துவது அவர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் இவர்களுடைய உளவாளிகள் களத் தில் இறங்கி வேலை செய்வது என்று செம ஸ்ட்ராங்கான பந்தம்.

சி.ஐ.ஏ. உதவியுடன் மொசாட்டின் பலம் அதிகரிக்க அங்கே இஸ்ரேலில் சில அரசியல்வாதிகள் அதிகாரிகளுக்கு வயிறெரிந்தது. பிரதமர் பென்குரியனிடம் ஐஸர் ஹரேலைப் பற்றி வித விதமாக வத்திவைக்க ஆரம்பித்தார்கள். இந்த ஆள் சரியில்லை திரைமறைவில் என்னென்னவோ செய்கிறார். நீங்கள் கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்து கொள்ளுங்கள்.

மொசாட் இஸ்ரேல் பிரதமரின் செல்லப் பிள்ளைதான். ஆனாலும் அதன் தலைவர் இப்படிப் பெரிய சக்தியாக வளர்வதைப் பிரதமர் விரும்பவில்லை. ஐஸர் ஹரேலுக்குப் பலவிதமான நெருக்கடிகள் தொடங்கின.

*1963* ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஐஸர் ஹரேல் மொசாட் தலைமைப் பதவியிலிருந்து விலகினார். அவருக்கப் பதிலாகப் புதிய தலைவராக நியமிக்கப்பட்டவர் மியர் அமித்!

ஐஸர் ஹரேல் பத்து வருடங்களுக்கு மேல் மொசாட்டின் தலைவராக இயங்கியிருக்கிறார். இந்தக் காலகட்டத்தில் அவர் அமைத்துக்கொடுத்த அடித்தளத்தில்தான் இன்றைக்கும் மொசாட் மிக வலுவாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

அவருக்குப் பதில் மொசாட் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மியர் அமித்தும் நல்ல அனுபவம் கொண்டவர்தான். ஆனால் அவரால் சூப்பர் மேன் ஐஸர் ஹரேலைப்போலச் சிறப்பாகப் பணியாற்றமுடியுமா என்கிற சந்தேகம் பலருக்கு இருந்து. முக்கியமாக ஐஸர் ஹரேலுக்குக் கீழே வேலை செய்தவர்கள் பலர் இவரை மதிக்கவும் இல்லை. அவரோடு ஒத்துழைக்கவும் இல்லை. வேண்டுமென்றே முறைத்துக் கொண்டு மூலையில் போய் நின்றார்கள்.

இவர்களுக்கெல்லாம் தன்னுடைய திறமையை நிரூபிப்பதற்காக மியர் அமித் ஓர் ஆபத்தான வேலையில் இறங்கினார். மொசாட்டின் அண்ணாத்தேக்காளான சி.ஐ.ஏ. வையே ஆச்சரியத்தில் வாய் பிளக்க வைத்த அதிரடி அது!

### கடத்தப்போவது யாரு?

எனக்கு ஒரு மிக்21 வேணும் என்றார் ஜெனரல் மொர்டெசாய் ஹாட்.

மிக்21 என்றால் ஏதோ கடையில் போய்க் காசு கொடுத்து வாங்கி வருகிற சமாசாரம் இல்லை. அதிநவீனப் போர் விமானம் ரஷ்யாவின் தயாரிப்பு.

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான பனிப்போர் சூடு பிடித்திருந்த நேரம் அது. ரஷ்யகாரர்கள் புதிதாக என்ன செய்தாலும் அமெரிக்கர்களுக்கு ஜன்னி கண்டது. எப்போதும் அவர்களுடைய தொழில்நுட்பத்தைவிட நாம் ஒரு படிமேல இருக்கவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணியில்...

முற்பட்டபோது அதனுடன் மோதுண்டதில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் வியாழக்கிழமை (31) உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## சுன்னாகத்தில்...

விற்குட்பட்ட சபாபதிப்பிள்ளை வீதியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனியாகச் சென்ற ஒருவர் மீது முச்சக்கரவண்டியில் வந்த மூவர் அடங்கிய குழுவினர் இந்த வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

படுகாயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுதிக்கப்பபட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## நிலக்ஸனின்...

ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்ஸனின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில நிலக்ஸனின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணியப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, சுடரேற்றப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடகக் கற்கை மாணவனும் சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும் யாழ்.மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்ஸன் 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அவரது வீட்டில் இருந்த வேளை , அவரது வீட்டிற்கு ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்த அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுததாரிகள்நிலக்ஸனை வெளியே அழைத்து அவரது பெற்றோர்கள் முன்னிலையில் சுட்டுப்படுகொலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## தமிழர்கள்...

கொண்டதன் அடிப்படையில் சிறீதரன் நேற்று அங்கு சென்றிருந்தார்.

குறித்த அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகளில் சர்வதேச நிபுணத்துவக் கண்காணிப்பு அவசியமானது என்பதுடன், ஸ்கானிங் இயந்திரம் உள்ளிட்ட நவீனத் தொழில்நுட்ப உபகரணங்களின் உதவியோடு அப்பகுதியில் முழுமையான அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1995ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரையும் முழுக்க முழுக்க இராணுவ முகாமாகவும், இராணுவக் கட்டுப்பாட்டு வலயமாகவும் கையகப்படுத்தப்பட்டிருந்த செம்மணிப் பகுதியில் இனங்காணப்படும் மனித என்புத் தொகுதிகள் சாதாரணமாகப் புதைக்கப்பட்டவைதான் என்று கூற முற்படுவது மிக அபத்தமானது.

இந்துக்களின் சடங்குமுறையில் உடலங்களைக் கூட்டாக அடக்கம் செய்வதோ, ஆடைகளற்று அடக்கம் செய்வதோ பின்பற்றப்படுவதில்லை.

அவ்வாறிருக்க ஒரு இனத்தின் பல தசாப்த காலப் போராட்டத்துக்கான சாட்சியமாக அணுகத்தக்க முக்கியத்துவம் மிக்க விடயமொன்றை மடைமாற்றும் செயற்பாடுகளில் சிலர் ஈடுபடுகிறார்கள்.

அத்தகைய செயற்பாடுகளைக் கடந்து, செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வுப்பணிகள் முழுமையாக நடைபெற்று உண்மைகள் கண்டறியப்படுவதற்காக, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் கவனத்தைக் கோரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வோம் என்றார். (ம-7)

## ஐ.நாவில்...

எனினும் கடிதத்தின் இறுதி வடிவத்தில் கொள்கையளவில் சகலரும் கையொப்பமிட்டுள்ளதால் அவற்றை பலப்படுத்தும் வகையிலான திருத்தங்களை மேற்கொள்வதற்கு மாத்திரம் இணங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜெனிவா அமர்வில் பொறுப்புக்கூறல் தொடர்பில் முன்வைக்கப்படவுள்ள புதிய தீர்மானத்தைப் பலப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுத்தபோதும் அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இலங்கைத்தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது. இதன்போது தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் ஆகியோரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக சுமந்திரன், எஸ்.சத்தியலிங்கம், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரும் சிவில் சமூகம் சார்பாக கலாநிதி குமாரவடிவேல் குருபரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கூட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் போது அதில் கடிதம் தொடர்பில் ஆராயப்பட்டு அக்கூட்டம் நிறைவடையும்போது அது தொடர்பான தீர்மானத்தை அறிவிப்பதாகத் தெரிவித்துள்ளது.

கடிதத்தில் கையொப்பமிடுவதற்கு இணங்குவதாயின் அது தொடர்பில் இன்று மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் சிவில் சமூக அமைப்புகளையும் சந்தித்து தீர்மானத்தை அறிவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஏற்கெனவே இறுதி செய்யப்பட்டுள்ள கடிதத்தின் பொருளை மாற்றாமல், அவற்றை பலப்படுத்தும் வகையிலான திருத்தங்களை மேற்கொள்வதற்கான தீர்மானத்தைப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

எனினும் அவற்றில் உள்ள அம்சங்களை அகற்றுவதற்கு உடன்படவில்லை எனவும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் கடிதத்தை வெளியிடுவதை தாமதிக்க முடியாது என்பதை எடுத்துக் கூறியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.08.01
சீட்டிழுப்பு இலக்கம் 5908
N 0 7 5 0 2 4
அத சம்பத
N 5 0 2 4
சீட்டிழுப்பு இலக்கம் 483
National Lotteries Board

சுப தவசக்
2025.08.01
0824
கடகம் 04 08 15 50

தன நிதானய
திகதி - 2025.08.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1938
P 29 30 33 72 P
40926

மெகா பவர்
திகதி 01/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2256
J 02 23 34 44 59

ஜய
திகதி 2025.08.01
சீட்டிழுப்பு இலக்கம் 0176
G 4 5 6 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4150
சீட்டிழுப்பு திகதி 01.08.2025
V 24 48 73 74
V

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.01
சீட்டிழுப்பு இலக்கம் 1217
மகரம் 03 06 29 38 மகரம்
24080

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.08.2025 0616
B 9 2 8 6 5 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21.072.182.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2882
சீட்டிழுப்பு திகதி 2025.08.01 தினம் வெள்ளிக்கிழமை
08 14 15 33 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,629,928.80

சனிதா
திகதி 01.08.2025 வெற்றி வாரம் 5043
52 53 56 58 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,438,964.80
ரூ. 50,000/-

சசிரி
வெற்றி வாரம் 738
சீட்டிழுப்பு திகதி 01.08.2025
வெள்ளிக்கிழமை
18 25 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4594
சீட்டிழுப்பு திகதி 01.08.2025 தினம் வெள்ளிக்கிழமை
31 39 41 58 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,613,800.40

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 34 65 67 69 70
2058
01.08.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.585,520,456.00

அட கோடிபதி
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2708
சீட்டிழுப்பு திகதி: 2025.08.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77.775.825.60
45 74 75 76 R
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
30 . 12 . 1943

மறைவு
02 . 07 . 2025

## Dr.கந்தவனம் துரைராஜா

எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட துயரச் செய்தியை தெரிவித்து எங்கள் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய 31ஆம் நாள் சடங்கு இன்று 2ஆம் திகதி ஆவணி மாதம் நுணாவில் குளக்கட்டு விநாயகர் ஆலய இராமையா அன்னதான மடத்தில் நடைபெறும். தாங்கள் அனைவரும் தவறாது கலந்து இறந்தவர் நினைவைப் போற்றி ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகின்றோம்.

காலம் : 02.08.2025, 11 Am
இடம் : நுணாவில் குளக்கட்டு விநாயகர் கோவில்

(C-3552)

இங்ஙனம்:-
குடும்பத்தினர்

# தென்னிந்திய யாத்திரை

## தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரியுடனான யாத்திரை

ஆரம்பம் : 25.08.2025 | யாத்திரிகர் : 10 | நாட்கள் : 12

**தரிசிக்கும் இடங்கள் :** உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காலகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 45 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :** இருவழி விமான ரிக்கட் மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

# தென்னிந்திய யாத்திரை
# இதுவரை சென்றிராத புதிய ஆலயங்கள்

## தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடக, தெலுங்கான மாநிலத்திற் கூடான யாத்திரை

ஆரம்பம் : 14.09.2025 | நாட்கள் : 12

அகோபிலம், 9 நரசிம்ம பெருமாள் ஸ்ரீ சைவம் (ஜோதிலிங்கம்), மந்திராலயம், ஸ்ரீராகவேந்திரா ஜீவசமாதி, ஸ்ரீரங்க பட்டினம், சிருங்கேரி, வித்தியாபீடம், சங்கராபீடம், முரட்டீஸ்வராசிவன், சோமநாதர், காளபைரவர், கொள்நூர் மூகாம்பிகை, உடுப்பி கிருஸ்ணா, தர்மசாலா மஞ்சுநாதசுவாமி, கார்த்திகேயா, மகாநதி, பெல்லூர் அன்னபூரணி, மருதமலை முருகன், ஈசா, வேறு சில ஆலயங்களையும் தரிசிக்கலாம். நேரமிருந்தால் காணலாம்.

**மேலும் விபரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும் சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம். (இத்துடன் யாழ் – கொழும்பு போக வர வாகன வசதி செய்து தரப்படும்.)**

**“வந்தவரைக் கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்”**

(1393)

தொடர்புகளுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் : ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
sriranganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
077 768 0102, 077 736 2154

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3554)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள village hotel and indian restaurantற்கு சமையல் அனுபம் உள்ள வேலையாட்கள் தேவை
- உணவு பரிமாறுபவர்கள் (waiter)
- சுத்திகரிப்பு தொழிலாளர்கள் (cleaning staff)

(4942)

076 830 3931

## விற்பனைக்கு

349 km ஓடிய பஜாஜ் பச்சைநிற முச்சக்கர வண்டி உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு (C-3549)
076 872 6589

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 209/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 241/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 359/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 205/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2800/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 195/= | Max 3Kg |
| 1Kg கீரிச்சம்பா | - 255/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 1100/= | |
| 1Kg கடலை | - 384/= | |
| 1Kg சோயா | - 330/= | |
| 01 அங்கர் யோகட் | - 45/= | ~~70/=~~ |

400g Anchor 1100/= Max 01
1Kg சன்லைட் 280/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (1400)
Happy Supermarket 0777 8080 30




AUG 3RD 2025

ஜீ தமிழ் பிரபல தொகுப்பாளினி அர்ச்சனா உடன்

மற்றும் ஜீ தமிழ் புகழ் சதீஷ் இசைக்குழு

6 PM ONWARDS

ARIYALAI COMMUNITY CENTRE GROUND

(1394)

TICKETS AVAILABLE ON

HARI AIR TRAVEL — 108, HOSPITAL RD, JAFFNA
HARI ENGINEERING — PUTHUTHODAM, ALVAI SOUTH, NELLIYADY
JEEVAN PHARMACY — DR SUBRAMANIAM RD, CHUNNAKAM
TOP SILK — NO 17A, K.K.S RD, MARUTHANARMADAM
E-MOBILE SHOP — MAIN STREET, NELLIADY
SINGHAGIRI — NO 1 STANLEY RD, JAFFNA

ONLINE TICKETS AVAILABLE ON bookmyshow

GOLDEN PASS 5000/= | SILVER PASS 3000/= | BRONZE PASS 2000/= | NORMAL PASS 1000/= (PHYSICAL TICKETS ONLY)

Silver Sponsor | Official Hospitality Partner | Official Photography & Videography Partner | Official Digital Media Partner | Official Makeup Partner | Official Website Partner | Official Printing Partner

076 148 6461 | 076 148 6462

EVENT MANAGEMENT BY NARMATHAN | NAREEN CREATIONS

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org